**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 25 /2014</u>**

DW2 – திரு. முத்துராமலிங்கம் நாள். 06.02.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பிராதில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி தாவா சொத்தை குறித்து பிராதில் சொல்லி உள்ள சொத்து விவரம் சரி என்றால் சரியல்ல. சர்வேஎண்.181/55 இடமானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மாரியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது. சொத்து விவரம் எதனால் சரியல்ல என்றால் புறம்போக்கு என சொல்லி உள்ளது தவறாகும். மாரியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது நினைவில் இல்லை.

2. சர்வே்எண்.181/55 ற்கு தெற்கே 181/65 உள்ளது என்றால் சரிதான். 181/65 பாதையாக உள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரில் மனையிடமாக உள்ளது. சர்வேஎண்.181/42 சொத்தை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அந்த மாரிமுத்துவின் வீடு உள்ளது. 181/55,181/65,181/42 சொத்துக்களின் புலப்படத்தை நான் பார்த்துள்ளேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை